சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS No. 96/2019

05.12.2024

<u>வா.சா.1 சித்ரா க/பெ ரவிசங்கர் மீண்டும் அழைக்கப்பட்டு 1, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் எனது வழக்குரையின் 3 வது, 4 வது பாராவில் நான் சொத்தை விற்பதற்கு பவர்கொடுக்கவில்லை. பராமரிப்பதற்கு தான் பவர் பத்திரம் 2 ம் பிரதிவாதிக்கு பெயருக்கு எழுதிக்கொடுத்ததாகவும் , மாலை நேரம் என்பதால் அது தெரியாமல் போய்விட்டது என்றும், அதனால் தான் மறுநாள் காலை பவரை ரத்து செய்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்குரையில் சொல்லியுள்ள வகையில் அவர் பவரை ஏமாற்றிவாங்கிவிட்டார் என்ற விசயத்தை மறுநாள் காலையில் தான் எனக்கு தெரியும் என்றால் அவர் சொல்லி தான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 மற்றும் 6 ஆவணத்தில் மேற்கண்ட என் வழக்குரை பாரா 3 மற்றும் 4 ல் சொல்லியுள்ள எந்த சங்கதிகளையும் சொல்லவில்லை என்றால் சரிதான் என் எண்ணத்திற்கு விரோதமாக செயல்பட்டதால் சொல்லியுள்ளேன். வழக்குரை பாரா 3 மற்றும் 4 ல் என் எண்ணத்திற்கு விரோதமாக செயல்பட்டுள்ளார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என் வழக்குரையில் பவர் பத்திரம் ஏமாற்றி வாங்கியது மறுநாள் காலையில் பிரதிவாதி சொல்லி தெரிய வந்தது என்று குறிப்பிட்டு எந்தவொரு சங்கதியும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் பி.ஏ படிப்பு படித்துள்ளேன். என் கணவர் பைனான்ஸ் அடகு கடை வைத்து நடத்தி வருகிறார். 2 ம் பிரதிவாதி என் கணவரின் சகோதரர் ஆவார். சூரஜ்குமார்அப்பா எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். பவர் எழுதிக்கொடுத்த தேதியில் எனக்கு அடைக்கமுடியாத அளவிற்கு எனக்கு நிறைய கடன்கள் இருந்தது என்றால் சரியல்ல. கடன்காரர்களுக்கு சொத்தை விற்று கடனை அடைக்க செய்தால் பிரச்சனை ஏற்படும் என்ற காரணத்தினால் எனது கணவரின் சகோதரரிடம் பவர் கொடுத்து விற்க சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி மீது காவல் துறையில் ஏதேனும் நான் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. உறவினர் என்பதால் பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன். பவர் பத்திரத்தில் நான் எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் மாலை 5.30 மணியளவில் நான் பவர் பத்திரத்தில் கையொப்பம் செய்தேன். பவர் பத்திரத்தில் சொத்தினை விற்பனை செய்வதற்கு முழு அதிகாரம் வழங்கியுள்ளேன் என்றால் அதை தவறாக பயனப்படுத்தி கொண்டார். பவர் பத்திரத்தை நான் முழுமனதுடன் மனமுவந்து கொடுத்தேனா அல்லது கட்டாயப்படுத்தியதன் பேரில் கொடுத்தேனா என்றால் என்னை கட்டாயப்படுத்தியதன் பேரில் கொடுத்தேன். எப்போது எந்த நேரத்தில் என்னை கட்டாயப்படுத்தி பவர் பத்திரத்தை எழுதிக்கொடுத்தேன் என்றால் அன்றைய தினம் காலையில் 2 ம் பிரதிவாதி 11 மணிக்கு என் வீட்டிற்கு வந்து என் மகளை கடத்திவிடுவதாக கூறியதாலும் பவர் என்றால் என்ன என்று தெரியாமல் கையொப்பம் செய்து கொடுத்தேன். எத்தனை பேர் மிரட்டினார்கள் என்றால் 2 ம் பிரதிவாதி மட்டும் இருந்தார். அப்போது என் கணவர் அங்கு இருந்தார். சொத்தை எழுதிக்கொடுங்கள் என்று கேட்டார். நானும் எழுதிக்கொடுத்தேன். எழுதிக்கொடுத்த பிறகு தான் அது பவர் என்றே எனக்கு தெரிந்தது. பிள்ளைக்காக பயந்து சொத்தை

எழுதிக்கொடுத்தேன். மறுநாள் காலையில் தான் அவர் கிரயம் பெறவில்லை. பவர் பத்திரம் எழுதிவாங்கியுள்ளார் என்று தெரியவந்தது. நாங்களும் எங்களது குடும்பத்தினரும் கம்மாளத் தெருவில் மதிப்புமிக்க குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது கணவர் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். எனது வழக்குரையிலோ, அறிவிப்பிலோ என்னை கட்டாயப்படுத்திதான் எனது கணவரின் சகோதரரான 2ம் பிரதிவாதி பவர் பத்திரத்தை எழுதி வாங்கினார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் அசல் பத்திரத்தை காட்டாமல் தான் பவர் பத்திரம் எழுதிவாங்கினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் எனது சகோதரர் 1ம் பிரதிவாதி தந்தைக்கும் வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பே என்ன பிரச்சனை என்றால் சொத்து சம்மந்தமாக பாகப்பிரிவினை பிரச்சனை இருந்தது. எனது சகோதரர் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. அந்த தீர்ப்பை ஆட்சேபணை செய்து அவர் திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார். எனது வழக்குரையில் பவர் பத்திரத்தை நான் நேரிடையாக ரத்து செய்யாததற்கு நான் எந்த காரணமும் கூறவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த பவர் பத்திரத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று நான் படித்து பார்த்தேனா என்றால் அன்றைய தினம் படிக்கவில்லை. பின்னிட்டு படித்து தெரிந்துகொண்டேன். அந்த பவர் பத்திரத்தில் அனைத்து அதிகாரத்தையும் எனது கணவரின் சகோதரர் 2ம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எங்களுக்கும் எனது கணவரின் சகோதரருக்குமிடையே சுமூகமான உறவு உள்ளது என்றால் வழக்கிற்கு முன்பு இருந்தது தற்போது இல்லை. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 3061/2 ஆகும். அதன் விஸ்தீரணம் எத்தனை சதுரடி என்றால் தெரியாது. நானும் எனது கணவரும், எனது கணவரின் சகோதரரான 2ம் பிரதிவாதி ஒன்று சேர்ந்து 1ம் பிரதிவாதி குடும்பத்தை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்து தான் என்னை பழிவாங்குகிறார்கள். அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களாவார்கள். நான் என்னுடைய முழு விருப்பத்தின் பேரில் ஒரு பவர் பத்திரத்தை எழுதி பதிவு செய்துகொடுத்தவிட்ட பிறகு அந்த பத்திரத்திற்கு முரணாக நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றாலும் அப்படியொரு பிரச்சனை ஏற்பட்டால் 2ம் பிரதிவாதியிடம் நான் கிரயத் தொகையை மட்டும் தான் கேட்கமுடியும் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.6 கொடுத்த தேதியில் என்னை யாரும் மிரட்டவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தை பொறுத்து நான் ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வெளிநாடு செல்லாத காரணத்தினாலும் மேற்படி சொத்தின் உரிமையாளரான நானே நிர்வகிக்க வேண்டும் என்றும் பராமரிக்க வேண்டும் என்றும் குறிபிட்டு வா.சா.ஆ.6 ஆவணத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு அனுப்பிய தேதியில் எனது கணவரின் சகோதரர் என்னை மிரட்டினார் என்பதை அறிவிப்பில் குறிப்பிடாமல் போனதற்கு என்ன காரணம் என்றால் பயம் காரணமாக சொல்லவில்லை. எனக்கு பயம் எப்போது தீர்ந்தது என்றால் தற்போது வரை அவர் மீதுள்ள பயம் தீரவில்லை. பவர் கொடுத்த தேதியில் பிறகு ஒவ்வொரு அறிவிப்பு கொடுக்கும்போதும் பின்னிட்டு புதுப்புது கதைகளை யோசனை செய்து

சொல்லிவருகிறேன் என்றால் சரியல்ல. பவர் பத்திரம் பதிவு செய்யும்போது சார்பதிவாளர் என்னிடம் உங்களுக்கு பவர் கொடுக்க விருப்பமா என்று கேட்டாரா என்றால் கேட்கவில்லை. அந்த சமயமும் கட்டாயத்தின் பேரில் தான் பவர் கொடுத்தேன். எனது குடும்ப பிரச்சனை காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு நான் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதை அவர் பெற்றுக்கொண்டதாகவும் முற்றிலும் உண்மைக்கு புறம்பாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.12.09 19:42:16 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.